# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## TRCSL இற்காக Balanced Scorecard (BSC) Key Performance Indicator (KPI) கட்டமைப்பு ஒன்றின் மீளாய்வு, மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காக ஆலோசனை சேவைகளிடம் இருந்து முன்மொழிவுகளுக்கான அழைப்பு

**கேள்விமனு இல.: TRC/ADM/01/02/03/11**

TRCSL இன் ஊழியர்களுக்காக செயற்படுத்தல் திட்டத்தை தயாரித்தல் உட்பட Balanced Scorecard (BSC) Key Performance Indicator (KPI) கட்டமைப்பு ஒன்றின் மீளாய்வு, மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் ஆலோசனை சேவைக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் (TRCSL) தகுதிபெற்ற ஆலோசகர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

ஆர்வமுடைய ஆலோசகர்கள் 2025.10.27 ஆம் திகதி தொடக்கம் 2025.11.10 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை TRCSL இன் நிர்வாக மற்றும் நிறுவன விவகாரப் பிரிவில் இருந்து 1,000 ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.

2007 – ஆலோசகரின் தேர்வு மற்றும் பணியமர்த்தலுக்கான வழிகாட்டல் விதிகளில் உள்ள ஒரே கட்ட இரட்டைக் கடித உறைகள் விலைமனு நடைமுறையின் கீழ் முன்மொழிவுகள் ஏற்கப்படும்.

இரு முன்மொழிவுகளும் வெவ்வேறு கடித உறையில் மூடப்படுதல் வேண்டும் என்பதோடு அவற்றின் இடது பக்க மேல் மூலையில் "KPI இனை அமைத்தலுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை – தொழில்நுட்ப முன்மொழிவு" மற்றும் "KPI இனை அமைத்தலுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை – நிதி முன்மொழிவு" என்று குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முன்மொழிவுக்கான கோரிக்கை KPI இனை அமைத்தல் - தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் தமது முன்மொழிவுகளை முன்மொழிவுக்கான இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு, இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது TRCSL இன் நிர்வாக மற்றும் நிறுவன விவகாரப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

**முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி: 2025.11.11 அன்று பி.ப. 2.00**

**தலைவர்**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை**
**கொழும்பு - 08**